# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 130 • வெள்ளிக்கிழமை Friday • 07.08.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode


# "தொலைநோக்கு பார்வையுடன் கூடிய பொது, வேளாண் பட்ஜெட்"



## முதலமைச்சர் விஜய் பாராட்டு

சென்னை: "தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய திருத்திய நிதிநிலை அறிக்கை அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும் புதிய நம்பிக்கையை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. வேளாண் நிதிநிலை அறிக்கை அனைத்துத் தரப்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது" என தமிழக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாட்டின் வளர்ச்சியை இலக்காகவும், மக்கள் நலனை மையமாகவும் கொண்டு, ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே மாதங்களில் அனைவரும் பாராட்டும் வகையில் 2026 – 27ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் மரிய வில்சனுக்கும், வேளாண்மை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் ர.வினோத்துக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய திருத்திய நிதிநிலை அறிக்கையானது மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், திருநர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழில்முனைவோர், அரசுப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும் புதிய நம்பிக்கையை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கையானது, தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியோடு, அதன் தொழில் சார்ந்த கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு, பால்வளம், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்ற தொழில்களையும் மேம்படுத்துவதோடு, அனைத்துத்தரப்பு விவசாயிகளின் நலனையும் வாழ்வாதாரத்தையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வளமான தமிழ்நாட்டை நோக்கிய நமது வெற்றிப் பயணம் தொடரட்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# உயிர்ம முறை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.4,000 ஊக்கத்தொகை





## தமிழக வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு

சென்னை: '20 ஆயிரம் ஏக்கரில் உயிர்ம வேளாண் முறைகளை பின்பற்றும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும்' என வேளாண் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவையில் நேற்று பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இன்று வேளாண் பட்ஜெட்அமைச்சர்வினோத் தாக்கல் செய்தார்.

வேளாண்பட்ஜெட்டில் மண்வள பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் வெளியான அறிவிப்புகள்:

>மண்ணில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், ரசாயன உரங்களை பயன்பாட்டை குறைத்தல், இயற்கை உயிர்ம வேளாண் முறைகளை ஊக்குவித்தல் ஆகிய செயல்பாடுகளை மேற்கொண்டு வளமான மண்ணை உருவாக்க தமிழ்நாடு மண்வள பாதுகாப்பு இயக்கம் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்தாண்டு திட்டமாக அறிமுகப்படுத்தப்படுகிறது. > மண் வளத்தை அறிந்து சமச்சீர் உரப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக ஒரு லட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் 4 கோடி நிதியில் மண்வள அட்டைகள் வழங்கப்படும். > உழவர் அடையாள எண் பெற்ற சுமார் மூன்று லட்சம் விவசாயிகளுக்கு மண்நல அட்டைகள் ஒன்றிய, மாநில அரசின் நிதித் திட்டத்தில் ரூ.6.16 கோடி செலவில் செயல்படுத்தப்படும். > மண்வளத்தை மீட்டெடுக்க ஒரு லட்சம் ஏக்கர் பசுந்தாள் விதைகள் வழங்குவதுடன், 22,000 ஏக்கருக்கு தேவையான பல்வகை தானிய விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுவதுடன், பசுந்தழைகளை நிலத்தில் மடக்கி உழவு செய்திட ஏக்கருக்கு 3000 ரூபாய் உழவுமானியம் வழங்கப்படும் .இதற்கான 63 கோடியே 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். > ரசாயன உர பயன்பாட்டை குறைக்க திரவ உயிர் உரங்கள் ரூ.4.50 கோடியிலும்,பயிர் ஊக்கிகள் 12 கோடி 38 லட்சம் ரூபாய் செலவிலும் விநியோகி க்கப்படும். > 20 ஆயிரம் ஏக்கரில் உயிர்ம வேளாண் முறைகளை பின்பற்றும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும். > இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க நிரந்தர மண்புழு உர கூடங்கள் அமைக்க உங்கள் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

உயிர்ம விவசாயிகளுக்கு உயிர்ம வாய்ப்பு சான்றிதழ் இலவசமாக வழங்கப்படும். > வளம் குறைந்த மண்ணை தேர்ந்தெடுத்து சீர்திருத்தம் செய்ய செயல்விளக்கம் மேற்கொள்ள இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

> தமிழ்நாடு மண்வள பாதுகாப்பு இயக்கம் 122 கோடி 51 லட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும். > விதை பண்ணைகள் அமைத்து 7,730 மெட்ரிக் சான்று நெல் விதை உற்பத்தி செய்து தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமைக்கு வழங்கும் விவசாயிகளுக்கு நெல் விதை உற்பத்தி மானியமும், 14,570 மெட்ரிக்டன் சான்றளிக்கப்பட்ட விதைகளை மானியத்தில் விநியோகிக்க நெல் விதை விநியோகம் மானியமும் வழங்குவதற்கு 34 கோடியே 72 லட்சம் ரூபாய் மாநில நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

# 'வேளாண் பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் எதுவும் இல்லை'

## எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்



தவெக அரசின் வேளான் பட்ஜெட்டில் உருப்படியாக எதுவும் இல்லை என எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சட்டசபை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், இது தொடர்பாக பேசியதாவது; தவெக ஆட்சி அமைந்து கடைசி 3 மாதங்களில் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகள். அவர்களுக்கு ஆதரவாகவும், அவர்களுடைய உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் விதமாகவும், இந்த அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவும் தான் இன்று எங்களின் தலைவரின் உத்தரவின் பேரில் திமுகவின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கருப்பு சட்டை அணிந்து எங்களின் எதிர்ப்பை தெரிவித்தோம். வேளாண் பட்ஜெட் என்று சொல்வதை விட, முதல்–அமைச்சருக்கு ஜால்ரா அடித்த புகழுரை என்று சொல்லலாம். தவெக அரசின் வேளாண் பட்ஜெட்டில் குறிப்பிட த்தக்கவிஷயங்கள் எதுவுமில்லை. புதிய அறிவிப்புகள் எதுவும் இல்லை. பல வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றினர். கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. மேகதாது, பயிர்க்கடன் தள்ளுபடி, குறுவை சகுபடி பிரச்சினை என பல பிரச்சினைகள் தமிழகத்தில் உள்ளன.

கோரிக்கைகளுக்கும், கேள்விகளுக்கும் முதல்–அமைச்சர் வாய் திறந்து பதில் தரவில்லை. காவிரி விவகாரம் குறித்துப் பேச நாளை ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர கடிதம் வழங்கியுள்ளோம். அப்போது நிறைய கேள்விகள் கேட்போம். முடிஞ்சா, தைரியம் இருந்தா முதல்–அமைச்சர் வாயை திறந்து பதில் சொல்லட்டும்."

இவ்வாறு அவர் பேசினார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### கோவை பிச்சனூர் பகுதியில் உள்ள ஜே.சி.டி. கல்லூரியில்

## 150 ஏஐ முகவர்களுடன் இயங்கும் ஸ்மார்ட் கேம்பஸ் இஆர்ஜ திட்டம் துவக்கம்

### ஜே.சி.டி. கல்லூரி மாணவர்களின் புத்தாக்க சாதனையாக இந்த திட்டம் அமைந்துள்ளதாக கல்லூரி நிர்வாகம் அறிவிப்பு



கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஜே.சி.டி. பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை யின் இரண்டாம் ஆண்டு மாணவர்களான சஞ்சய் கிருஷ்ணன் மற்றும் பரத் ராஜ் உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் அஜென்டிக் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஜேசிடி அஜென்டிக்ஏஐஸ்மார்ட் கேம்பஸ் இஆர்பி என்ற புத்தாக்கத் திட்டத்தை உருவாக்கியுள்ளனர். மனிததலையீடு இல்லாமல் நிர்வாகப் பணிகளைத் தன்னிச்சையாக மேற்கொள்ளும் வகையில், முதற்கட்டமாக 10 தன்னாட்சி AI முகவர்கள் வெற்றிகரமாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக மாணவர் சேர்க்கை, வருகைப் பதிவு, கட்டண மேலாண்மை போன்ற வளாகநிர்வாகப் பணிகளுடன், ஒவ்வொரு மாணவரின் கற்றல் திறனுக்கு ஏற்ப தனிப்பயன் படிப்புக் குறிப்புகள் மற்றும் பயிற்சிவினாக்களை வழங்கும் பல்வேறு சிறப்பம்சமும் இதில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் இப்புதுமையான முயற்சியைப் பாராட்டிய கல்லூரி நிர்வாகம், திட்டத்தின் அடுத்தகட்டமாக 150 AI முகவர்களுடன் இயங்கும் முழுமையான அமைப்பை உருவாக்க உறுதியளித்துள்ளது. இதன் மூலம் கல்வி, நூலகம், விடுதி, போக்குவரத்து, வேலைவாய்ப்பு மற்றும் நிதி நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து வளாகச் செயல்பாடுகளும் ஒருங்கிணைந்த நுண்ணறிவுத் தளமாக மாற்றப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் இந்த புதுமையான முயற்சியைப் பாராட்டிய ஜே.சி.டி. கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கௌதமன் ராஜமாணிக்கம், செயலாளர் ஆர். துர்காசங்கர் மற்றும் முதல்வர் டாக்டர் எஸ். மனோகரன், துறை தலைவர் சக்தி விநாயகம் ஆகியோர் திட்டத்தின் அடுத்த கட்டமாக 150 AI முகவர்களுடன் இயங்கும் இந்தஏஐஅமைப்பை உருவாக்க கல்லூரி முழுமையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்தனர்.



### தாய்ப்பால் ஊட்டுதலும், அதற்கு அப்பாலும்" என்ற தலைப்பில்,

## தாய்ப்பாலின் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி

### கோவை ராவ் மருத்துவமனை சார்பாக நடைபெற்றது

கோவை ஆர். எஸ். புரத்தில் செயல்பட்டு வரும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையான ராவ் மருத்துவமனை சார்பில், கர்ப்பிணிப் பெண்கள், புதிய தாய்மார்கள் மற்றும் அவர்களதுகுடும்பத்தினருக்காக "தாய்ப்பால் ஊட்டுதலும் அதற்கு அப்பாலும்" என்ற தலைப்பில் தாய்ப்பால் ஊட்டுதல், பிறந்த குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் குழந்தை உணவளிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. எஃப்.ஐ.சி.சி.ஐ. ஃபுளோ கோவை, கோவை ஆக்ருதி ரோட்டரி சங்கம் மற்றும் கோவை இன்னர் வீல் சங்கம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் நோக்கம், தாய்ப்பாலின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, குழந்தை பிறந்த பின் ஆரம்ப மாதங்களில் தாய்மார்கள் தன்னம்பிக்கையுடன் குழந்தையைப் பராமரிக்க தேவையான நடைமுறை அறிவை வழங்குவதாக அமைந்தது. நிகழ்ச்சியில் மூத்த குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவரான டாக்டர் கே. எஸ். கிருஷ்ணசாமி, பாலூட்டல் ஆலோசகர் மற்றும் குழந்தை ஊட்டச்சத்து நிபுணரான பேபி ஸ்ரீ ஆகியோர் சிறப்புரையாற்றினர். தாய்ப்பால் ஊட்டுதல் தொடர்பான பொதுவான சந்தேகங்கள், பிறந்த குழந்தைகளின் உணவளிப்பு முறை, தாய்மார்களின் ஊட்டச்சத்து, துணைஉணவுகளை அறிமுகப்படுத்தும் சரியான காலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து அவர்கள் விளக்கமளித்தார். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, மூத்த மகப்பேறு மற்றும் கருத்தரிப்பு நிபுணரான டாக்டர் பி. சுகன்யா கதிர், பிரசவத்திற்குப் பிந்தைய மனிதபாப்பிலோமாவைரஸ்தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில்

## எளிய அறிவியல் சோதனைகள் மூலம் மாணவர்களுக்கு அறிவியல் விழிப்புணர்வு



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கான அறிவியல் செயன்முறை விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். மாணவி ஹாசினி வரவேற்புரை வழங்கினார்.

பயிற்சியாளர்கள் அரங்குளவன் மற்றும் தனசேகரன் ஆகியோர் பல்வேறு அறிவியல் உபகரணங்களைப் பயன்படுத்திஎளியஅறிவியல் சோதனைகளை நேரடியாக செய்து காண்பித்தனர். அன்றாட வாழ்க்கையில் அறிவியலின் பயன்பாடு, மின்கடத்தும் மற்றும் மின்கடத்தாப் பொருட்கள், நம்மைச் சுற்றி நிகழும் இயற்கை மாற்றங்கள், அறிவியல் கோட்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் செயல்முறை விளக்கங்களுடன் மாணவர்களுக்கு எளிமையாக எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று பயிற்சியாளர்களிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பி விளக்கங்களைப் பெற்றனர். இதன் மூலம் அறிவியலை செயல்முறை வழியில் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைத்தது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அ.மு.மு. அறக்கட்டளையினர் செய்திருந்தனர். நிறைவாக மாணவி நந்தனா நன்றியுரை வழங்கினார்.

## IOA எலும்பு&மூட்டு வாரம் 2026 ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு




எலும்பு மற்றும் மூட்டு வாரம்–2026–இன் 4–ஆம் நாளையொட்டி, தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சார்பில், நெல்லை ஆர்த்தோ கிளப் எலும்பு முறிவு மருத்துவர்கள் சார்பாக, ஆட்டோ மற்றும் பேருந்து ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நீண்ட நேரம் வாகனம் ஓட்டுபவர்கள் உடல் நிலையை சரியாகப் பராமரித்து, இடையிடையே ஓய்வு எடுத்து, தினசரி உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சினைகளைத் தவிர்க்கலாம் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பின்னர் இரு சக்கர வாகன ஓட்டிகள், தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஆட்டோ, பேருந்து ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர்.

### பாரத் சேவா கேந்த்ரா அமைப்பின் சார்பாக

## 2026ம் ஆண்டுக்கான உலக சாதனையாளர்கள் விருது வழங்கும் விழா கோவையில் நடைபெற்றது

### கோவையை சேர்ந்த வழக்கறிஞரும் சமூக ஆர்வலருமான புஸ்பாணந்தத்திற்க்கு விருதுகள் வழங்கபட்டது



பாரத் சேவா கேந்த்ரா அமைப்பின் சார்பாக, 2026ம் ஆண்டுக்கான உலக சாதனையாளர்கள் விருது வழங்கும் விழாகோவையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கோவையில் கடந்த 20 ஆண்டுகளாகசமூகசேவையாற்றி வருவதுடன், மாற்று திறனாளிகளுக்கு இலவச நோட்டரி கையேழுத்துக்களை வழங்கி வரும் வழக்கறிஞர் புஸ்பாணந்தத்திற்க்கு சிறந்த சமூக சேவகர் விருது வழங்கபட்டது. இதனை கலைமகள் டியூசன் சென்டர் உரிமையாளர் மகேஸ்வரன், ஆசிரியை கலையரசி, பந்தல்காரர் வெங்கடாச்சலம் ஆகியோர் இன்று வழங்கினர். தொடர்ந்து இது குறித்து வழக்கறிஞர் புஸ்பாணந்தம் கூறியதாவது..

கோவையில் வழக்கறிஞராக உள்ள தான், பல்வேறு சமூக பணிகளை செய்து வருகின்றேன், எந்த வித பிரிதிபலன் பார்க்காமல் இதனை செய்து வருகின்றேன். குறிப்பாக முதியோர் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு அரசால் கிடைக்க படும் அனைத்து உதவிகளையும் பெற்று தர அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றேன். மேலுல் பசுமையை காக்க மரக்கன்றுகள் நடுதல், அவற்றை பராமரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளையும், கோடை காலங்களில் நீர் மோர் பந்தல் அமைத்து பொதுமக்களுக்கு இலவச நீர் மோர் வழங்குவது, மாற்று திறனாளிகளுக்கு நோட்டரி கையேழுத்துகளை இலவசமாக போடுவது என பல்வேறு சமூக பணிகளை செய்து வருகின்றேன் இதனை பாராட்டும் விதமாக இந்த விருது தனக்கு கிடைத்துள்ளதாக நான் கருதுகிறேன் என்றார். இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் லட்சுமி, திவ்யா, ஜெபா,

முன்னாள் அதிமுக கவுன்சிலர் விஜயகுமார், மதிமுக 82 வது வார்ட் செயளாலர் மார்ஷல், வைத்தியர் பாலகிருஷ்ணன், அதிமுக வீரபாண்டி செயளாலர் ராமசாமி, வழக்கறிஞர் படித்துள்ள மலுமிச்சம்பட்டிசதாசிவம், சொமையனூர் கார்த்திக், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோவையில் வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்து காத்திருந்த ஆகஸ்ட் அதிரடி திருவிழா

## "யூஸ்டு கார் மேளா" திருவிழா 300க்கும் மேற்பட்ட கார்கள் ஒரே கூரையின் கீழ் நிறுத்தி அசத்தியுள்ள "கார்ஸ் 327" நிறுவனம்

### ஆகஸ்ட் 10ம் தேதிவரை நடைபெற உள்ளது



"கார்ஸ் 327" நிறுவனத்தின் சார்பில் "ஆகஸ்ட் அதிரடி திருவிழா""யூஸ்டுகார்மேளா திருவிழா " ஆகஸ்ட் 6ம் தேதி, துவங்கி 10ம் தேதி வரை தொடர்ந்து 5 நாட்கள் கோவை சிங்காநல்லூர் வெங்கடலட்சுமி திருமணமண்டபத்தில் நடைபெற உள்ளது. இதுகுறித்து "கார்ஸ் 327" உரிமையாளர் விஷ்ணு வேணுகோபால் பத்திரிகையாளர்களை சந்தித்து கூறியதாவது.., ஆடி தள்ளுபடி விற்பனையை எதிர்பார்த்த வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், இந்த கண்காட்சி ஆடி மாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கண்காட்சியில் 300க்கும் மேற்பட்ட தரமான யூஸ்டு கார்கள் இருப்பதாகவும், யூஸ்டு கார்கள் தேவைப்படுபவர்களுக்கு உடனடியாக பைனான்ஸ் ஏற்பாடு செய்து தருவதாகும், வங்கி கடன் உதவி மற்றும் தனியார் கடனுதவி உடனுக்குடன் செய்து கொடுப்பதாகவும், வாகனங்களுக்கு இன்சூரன்ஸ், சர்வீஸ் உள்ளிட்ட அனைத்தும் உடனடியாக செய்து கொடுப்பதாகவும், ரூபாய் ஒரு லட்சம் முதல் 50 லட்சம் ரூபாய் வரை கார்கள் இந்த கண்காட்சியில் இடம் பெற்று இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் வாடிக்கையாளர்கள் யூஸ்ட் கார்களை வாங்கும் பொழுது கார் மெக்கானிக்கை அழைத்து வந்து நன்கு சோதனை செய்து பின்னர் பெற்று கொள்ளுவது வாடிக்கையாளர்களுக்கும், எங்களுக்கும் இடையே உள்ள நல்ல உறவை நீட்டிக்கும் என்றார். மேலும் வாடிக்கையாளர்களின் பழைய கார்கள் எந்த நிலையில் இருந்தாலும் அதனை ஆய்வு செய்து நல்ல விலைக்கு, எக்ஸ்சேஞ் முறையில் பெற்று கொள்ளவும் இங்கு ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் இந்த வாய்ப்பை தவற விட்டு விட வேண்டாம் என்று கேட்டு கொண்டார்.

# வேலாயுதபுரத்தில் வேளாண்மைத்துறை மாணவர்கள் சார்பில் கிராமப்புற மதிப்பீட்டு வேளாண்மை பயிற்சி



சாம்பவர்வடகரை அருகே உள்ள வேலாயுதபுரத்தில் கோவையில் உள்ள காருண்யா தொழில்நுட்ப மற்றும் அறிவியல் கல்லூரியின் வேளாண்மைத்துறை மாணவர்கள்,

ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் சார்பில் கிராமப்புற மதிப்பீட்டு நிகழ்ச்சி நடந்தது

நிகழ்ச்சிக்கு வேலாயுதபுரம் ஊராட்சி மன்ற தலைவர் வேலுத்தாய் தலைமைவகித்து மாணவர்களையும் விவசாயிகளையும் பாராட்டி, கிராம வளர்ச்சியில் மக்களின் பங்களிப்பின் அவசியத்தையும், கிராமப்புற மதீப்பீட்டின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். மூத்த விவசாயி முருகன் முன்னிலைவகித்தார்.டாக்டர் நிவேதிதா தற்போதைய யுகத்தில் வேளாண்மையில் நவீனயுக்திகள் மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்து விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்

நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று, காலவரிசை, மேட்ரிக்ஸ், வள வரைபடம், வென் வரைபடம் மற்றும் சமூக வரைபடம் ஆகிய கருவிகளில் தங்களது கருத்துகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும், . இந்நிகழ்ச்சி மாணவர்களுக்கு கிராமப்புற வளர்ச்சி மற்றும் பங்கேற்பு அடிப்படையிலானதிட்டமிடல்குறித்து நடைமுறை அனுபவத்தை வழங்கியது. குறிப்பிடத்தக்கது



மதுரை மாவட்டம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், மதுரை பாலரெங்காபுரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ, சட்ட, உளவியல் ஆலோசனை, காவல் துறை மற்றும் மறுவாழ்வு உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகள் குறித்தும், சேவை பெறுவோருக்கான வசதிகள் மற்றும் பதிவேடுகள் குறித்தும் ஆய்வு செய்தார். மேலும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு துரிதமாகவும் தரமான முறையிலும் சேவைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யவும், மையத்தின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட அறிவுறுத்தினார்.

# ஆடி கிருத்திகையை முன்னிட்டு இரத்தினகிரி பாலமுருகன் கோவிலில் திரளான பக்தர்கள் தரிசனம்



இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அடுத்த இரத்தினகிரியில் அமைந்துள்ள அருள்மிகு பாலமுருகன் திருக்கோவிலில் ஆடி கிருத்திகையை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் வெகுவிமரிசையாக நடைபெற்றன.

விழாவையொட்டி முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் மகாதீபாராதனை நடைபெற்றது. இந்நிகழ்வுகள் தவத்திரு பாலமுருகன் அடிமை சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து கருவறை மற்றும் அனைத்து சன்னதிகளிலும் வெள்ளிச் தேர் மயில் வாகனம், ரிஷப வாகனம், மூஷிக வாகனம், கல்தேர் உள்ளிட்ட வாகனங்களுக்கு புஷ்ப அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் பன்னீர் காவடி, புஷ்ப காவடி, மயில் காவடி உள்ளிட்ட காவடிகளை தோளில் சுமந்தவாறு மேளதாளங்கள் மற்றும் வாத்திய இசையுடன் பக்தி பரவசமாக நடனமாடி கோவிலுக்கு ஊர்வலமாக வந்தனர். கோவில் படிக்கட்டுகள் தோறும் கற்பூர தீபம் ஏற்றி வழிபட்ட பக்தர்கள், கருவறையில் அருள்மிகு பாலமுருகனை தரிசித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

மேலும், திருவிழாவை முன்னிட்டு கோவில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் பல்வேறு அமைப்புகள் சார்பில் பக்தர்களுக்கு நீர்மோர், குடிநீர் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது

# தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத்தலைவர் சா.அருணன் அறிக்கை



தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை (05.08.2026) நிதி அமைச்சர் மாண்புமிகு மரிய வில்சன் அவர்கள் புதிய அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்

பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா ஸ்மார்ட் மிதிவண்டி, ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டிலுடன் வழங்கப்படும் என்ற அறிவிப்பு, வரும் கல்வி ஆண்டில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கீடு அறிவிப்பும்

பள்ளிகளைத் தூய்மையாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக்கொள்ள 10,000 பள்ளிகளுக்கு ரூ.153 கோடி ஒதுக்கீடு, ஏற்கனவே சென்ற ஆட்சியில் காலை உணவுத் திட்டம் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு உள்ளிட்ட அறிவிப்புகளைப் பெரிதும் வரவேற்கிறோம்.

அதேநேரத்தில் 12 ஆயிரம் பகுதிநேர சிறப்பாசிரியர்கள் கடந்த 15 ஆண்டுகளாக ரூ.5,000 மாத ஊதியத்தில் தொடங்கி தற்போது ரூ.15,000 மாத ஊதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கான அறிவிப்பு , 17 ஆண்டுகளாகச் சம வேலைக்குச் சம ஊதியம் கேட்டுப் போராடும் 20 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டைக் கலைவதற்கான அறிவிப்பு மற்றும் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற, அரசு ஊழியர்களின் நீண்ட ஆண்டு கோரிக்கையான புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வருவோம்" என்ற அறிவிப்பு ,தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் ஊழியர்களையும் காலமுறை ஊதியத்தில் கொண்டு வருதல் உள்ளிட்ட அறிவிப்புக்கள் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறாதது, ஒட்டுமொத்த அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது

இருந்தபோதிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகளை 110 விதியின் கீழ் அறிவிப்பார் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள் ஆதலால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக 110 விதியின் கீழ் .அறிவிக்க தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறேன்

சா. அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு

## தூத்துக்குடியில் உதயநிதி ஸ்டாலின் பேச்சை கண்டித்து

# த.வெ.க. தூத்துக்குடி மத்திய மாவட்டம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



முன்னாள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சைக்கண்டித்துதமிழ்நாடு முழுவதும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தமிழக வெற்றி கழகத்தின் முதலமைச்சர் ச.ஜோசப் விஜயின் ஆணைக்கிணங்க, கழக பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஆனந்த் வழிகாட்டுதலின்படியும், சட்டமன்ற உறுப்பினரும் மீன்வளத்துறை அமைச்சருமான ஸ்ரீநாத் உத்தரவின்படியும் தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளர் எஸ்.டி.ஆர்.சாமுவேல் தலைமையில் தூத்துக்குடி மத்திய மாவட்டதமிழகவெற்றிக் கழகம் சார்பில், தூத்துக்குடி விவிடி சிக்னல் அருகே உள்ள சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்ட நிர்வாகி கிஷோர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட தேர்தல் கண்காணிப்பாளர் ஜே.கே.ஆர். முருகன் ஆகியோர் தலைமை தாங்கினர். மாநில துணைப் பொதுச்செயலாளர் சுபத்ரா முருகன் மற்றும் தமிழக வெற்றிக் கழகத்தின் வழக்கறிஞர் அணி நிர்வாகியும், 51-வது மாமன்ற உறுப்பினருமான மந்திரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் திரளான கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பங்கேற்று, முன்னாள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய நிர்வாகிகள், அரசியல் நாகரிகத்தை அனைத்து அரசியல் தலைவர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சிகளின் கருத்துகளையும் ஜனநாயக மரபுகளையும் மதித்து பொது வாழ்க்கையில் செயல்பட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினர்.

இந்தகண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, மாநகர்,ஒன்றிய,பகுதி, கிளை நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள்கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடி பிரையண்ட் நகரில் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் திருக்கோவில் கொடை விழா தொடங்கியது

தூத்துக்குடி பிரையண்ட் நகர் இந்து நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட, அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் திருக்கோவில் கொடை விழா, ஆகஸ்ட் 6-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை வெகுவிமரிசையாக இன்று நடைபெற்றது.

இதையொட்டி கடந்த ஆகஸ்ட் 4-ம்தேதிமாலை கால் நாட்டு விழா நடைபெற்றது. தொடர்ந்து விழாவின்முதல்நாளான ஆகஸ்ட் 6-ம் தேதி அதிகாலை விநாயகர் பூஜை, கணபதி ஹோமம்,சிறப்பு பூஜைகள் இன்று நடைபெற்றது. மாலை சிலம்பம், பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் இரவு எஸ்.ஆர். சந்திரன் வழங்கும் இன்னிசை கச்சேரி நடைபெறுகிறது.

ஆகஸ்ட் 7-ம் தேதி சிறப்பு திருவிளக்கு பூஜையும், 8-ம் தேதி சிலம்பம், பரதநாட்டியம் மற்றும் தேய்வீக நடன நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. 9-ம் தேதி மகளிருக்கான கோலப்போட்டி மற்றும் மாணவ, மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.


ஆகஸ்ட் 10-ம் தேதி மாலை கும்மிப்பாட்டு நிகழ்ச்சியும், இரவு அம்மன் அருள் குறித்து ஆன்மிக சொற்பொழிவும், அதனைத் தொடர்ந்து மாகாப்பு பூஜையும் நடைபெற உள்ளது.

விழாவின் முக்கிய நிகழ்வான ஆகஸ்ட் 11-ம் தேதி அதிகாலை கணபதிஹோமம்,தீர்த்தவாரி, சிறப்பு வில்லிசை, மதிய கொடை,மாபெரும் அன்னதானம் மற்றும் இரவு சாமக் கொடை நடைபெறுகிறது. பின்னர் வாணவேடிக்கை மற்றும் அம்மன் சப்பர பவனியும் நடைபெறும்.

நிறைவு நாளான ஆகஸ்ட் 12-ம் தேதி அதிகாலை வாசலில் பொங்கலிடுதல், மதியம் மஞ்சள்நீராட்டுவிழாமற்றும் சிறப்பு பூஜைகளுடன் கொடை விழா நிறைவடைகிறது.

இந்த விழாவில் சுற்றுவட்டார பக்தர்கள் அனைவரும் கோவில் கொடை விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்து அம்மன் அருள் பெற தங்களை அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேம்

கோவில் நிர்வாகிகள் U.முத்துராஜன் நாடார் C. சதாசிவன் நாடார் S. ஐகோர்ட் துரை நாடார்



கோவில் கொடை விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க பக்த கோடி பெருமக்களை அன்புடன் அழைக்கும் செ சரவணகுமார் MC

50வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோவில் நிர்வாகத்தினர்அழைப்பு விடுத்துள்ளனர்.




1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE

The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.






ஈரோடுமாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்அந்தியூர்அருள்மிகுகுருநாதசுவாமி திருக்கோயில் தேர்த்திருவிழா, மாடு மற்றும் குதிரைக்கண்காட்சி 12.8.2026 முதல் 15.8.2026 வரை நடைபெறுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தலைமையில் (05.08.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்டம், வேப்பம்பாளையம், பிச்சாண்டாம்பாளையத்தில் உள்ள நாற்றுப்பண்ணையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், கதிரம்பட்டி, நஞ்சனாபுரத்தில் சாதனா மகளிர் சுய உதவிக் குழுவினர்களின் சிப்பிக்காளான் வளர்ப்பு நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.08.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

## Two coasts, three fee formulas, one Supreme Leader still to sign: The versions of IranOman deal on Strait of Hormuz



*Iran's foreign ministry spokesperson Esmail Baghchi said on Wednesday that Tehran and Muscat had settled on the geographic coordinates of a shipping route through the Strait of Hormuz, and that a joint statement was in "the final stages of review and drafting".*

*He added a caveat: the process would need to proceed without interference from "certain third parties" – a phrase that the Associated Press said appeared to refer to the United States – state news agency IRNA reported.*

*Negotiators from the two countries are now waiting on sign-off from Iran's Supreme Leader Ayatollah Mojtaba Khamenei, two regional officials briefed on the talks told AP. Khamenei has not appeared in public since the opening days of the war, when he is believed to have been wounded.*

*US President Donald Trump, speaking to reporters in Los Angeles hours before Iran's statement, said an announcement on a deal with Iran could come within 48 hours. "A lot of progress has been made," he said.*

*About one-fifth of the world's traded oil and liquefied natural gas moved through the Strait of Hormuz befor e the war, and the effective closure for over five months has pushed up global energy prices.*

*Iran has held de facto control of the waterway since the US and Israel launched joint strikes on Iranian territory on February 28, and it has since fired on commercial shipping it says has crossed without permission.*

*Washington answered with a blockade on Iranian ports. Brent crude sat near $79 a barrel in early Thursday trading – well below the highs seen during heavy fighting, but still elevated.*

*Ships had transited the strait freely before the war, with no fees or permissions required.*

*Officials familiar with the emerging accord told The New York Times that inbound ships would use a channel hugging the Iranian coast under Tehran's control, while ships leaving the Gulf would sail through a channel on the Omani side. AP reported the same structure.*

*A senior Iranian source cited by Reuters described the same setup for inbound traffic but said the arrangement for outbound ships remained one of the main sticking points.*



ஈரோடு மாவட்டம், வேப்பம்பாளையம், ஒருங்கிணைந்த குழந்தைகள் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.08.2026) ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்.

## இந்தியன் பாரா கிரிக்கெட் லீக் 3.0இன் வீரர்கள் ஏல நிகழ்ச்சி கோவை ஆர்.எஸ்.புரம், பகுதியில் உள்ள ப்ரூக்ஃபீல்ட்ஸ் வணிக வளாகத்தில் நடைபெற்றது





*உலகிலேயே முதன்முறையாக நேரடி பாரா கிரிக்கெட் வீரர்கள் ஏல நிகழ்ச்சிகோவைப்ரூக்ஃபீல்டு வணிக வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச்சேர்ந்தமாற்றுத்திறனாளி கிரிக்கெட் வீரர்கள் நான்கு அணிகளுக்காக பிரிக்க பட்டு, ஏலத்தில் தேர்வு செய்யப்பட்டனர்.*

*இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் முக்கிய பிரமுகர்கள்,தொழிலதிபர்கள், ஆதரவாளர்கள், ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் அமைப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*ரோட்டராக்ட் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் காலக்ஸிசார்பில்,தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் கிரிக்கெட் சங்கத்தின் இணைப்புடன் நடைபெறும் ஐபிசிஎல் 3.0 எனும் போட்டித் தொடர், வரும் செப்டம்பர் மாதம், 4ம் தேதி, 5ம் தேதி மற்றும் 6ம்தேதி ஆகிய தேதிகளில், கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள, 22 யார்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற உள்ளது*

*இந்த போட்டிகளானது இந்திய அளவில் மாற்றுத்திறனாளி கிரிக்கெட் வீரர்களுக்கு சமமான வாய்ப்பையும், அங்கீகாரத்தையும் வழங்கும் நோக்கில் நடைபெறும் இந்த முயற்சி, விளையாட்டு மூலம் உள்ளடக்கத்தை வலியுறுத்தும் முக்கியமான முன்னெடுப்பாக அமைந்துள்ளது இந்த நிகழ்ச்சியில் மொத்தமாக 113 விளையாட்டு வீரர்கள், கலந்து கொண்டனர் அதில்*

*60 வீரர்களை மட்டம்*

*ஏலத்தில் எடுத்துள்ளனர் அதில்,*

*ரேஜிங் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை சேர்ந்த, வியானை வீணை பள்ளி உரிமையிலான அணி ஏலம் எடுத்துள்ளது. டெல்லி யூனிகார்ன்ஸை ரோட்டரி யூனிகார்ன்ஸ் உரிமையிலான அணி ஏலம் எடுத்துள்ளது. கொல்கத்தா தண்டர் வாரியர்ஸ்,365 ஜாப்ரெடி ஆன்லைன் அகாடமி உ ரி மை ம யி ல ா ன அணியை ஏலம் எடுத்துள்ளது. தமிழ்நாடு டவுன்டவுன் டைகர்ஸை, ரோட்டேரியன் காட்வின் மரியா விஸ்வாசம் உரிமையிலான அணி ஏலம் எடுத்துள்ளது. இந்நிகழ்ச்சியில் நிகழ்ச்சியின் தலைவர் ஆக ரோட்டராக்டர் மிதுன் மற்றும் ரோட்டராக்ட் கிளப் ஆஃப் கோயம்புத்தூர் காலக்ஸியின் கழகத் தலைவர் ஆக ரோட்டராக்டர் ஜெயா கிஷோர் ஆகியோர் நிகழ்வை சிறப்பாகவழிநடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது*

## கோவை வடவள்ளி அடுத்த சேரகுல வேளாளர் கோவிலின் 14ம் ஆண்டு ஆடி உற்சவ திருவிழா



*கோவை வடவள்ளி அடுத்த நவாவூர் பிரிவு, ஆலமரத்தோட்டம் பகுதியில், அருள்மிகு வீரமாட்சியம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது.*


*சேரகுல வேளாளர் பிள்ளை சமூக குல தெய்வ திருக்கோவிலான, இத்திருக்கோவிலின், 14ம் ஆண்டு ஆடி உற்சவ திருவிழா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது. கோவை மாவட்டம் நவாவூர் பிரிவு, ஆலமரத்தோட்டம் பகுதியில், அருள்மிகு வீரமாட்சியம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. சேரகுல வேளாளர் பிள்ளை சமூக குலதெய்வ திருக்கோவிலான, இத்திருக்கோவிலின், 14ம் ஆண்டு ஆடி உற்சவ திருவிழா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.*

*கடந்த 4ம் தேதி கணபதி பூஜை,மற்றும்திருக்காப்பு கட்டுதலுடன் துவங்கபட்ட இத்திருவிழா, 5ம் தேதியன்று அம்மனுக்கு சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெற்றது. தொடர்ச்சியாக மேலதாளங்களுடன் முளைப்பாரி ஊர்வல நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை வேலையில், கோவை கல்வீரம் பாளையம் சித்தி விநாயகர் திருக்கோவில் பகுதியில் இருந்து, சக்தி கரகம் மற்றும் அம்மன் திருவீதியுலா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் பொழுது மேல தாளம் முழங்க, வான வேடிக்கையுடன், பட்டாசுகள் வெடித்து அம்மனை அழைத்து வந்து நவாவூர் பிரிவில் ஆலமரத் தோட்டம் உள்ள, வீரமாட்சியம்மன் திருக்கோவிலை வந்தடைந்தனர். பின்னர், அம்மனுக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்க பட்டது. வீரமாட்சியம்மன் ஆலமரத்தோட்டம் விழா குழுவினர்*

*சேரகுல வேளாலர் சங்க வடவள்ளி கிளை தலைவர் லோகநாதன், செயளாலர் ஜோதி மணி, பொருளாளர் வெங்கிடு சாமி, சேர குல வேளாளர் மாநில இளைஞரணி அமைப்பாளர் பிரபு ரவிச்சந்திரன், கோவில் கமிட்டி லேலுமணி,திருநாவுக்கரசு , சரவணன்,பாபு , சிவக்குமார் , அகில இந்திய வேளாளர் வெள்ளாளர் பேரவை நிறுவனர் சிவதேசிங்கம்,*

*தமிழ்நாடு சேரகுல வேளாளர் மாநிலதலைவர் பொன்ராஜ் பிள்ளை, முன்னார் தலைவர் வெள்ளியங்கிரி பிள்ளை, உள்ளிட்ட உறவினர்கள் இளைஞர்கள் நண்பர்கள் மற்றும் பக்தர்கள் பலர்கலந்து கொண்டு, அம்மனை வழிபட்டு சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது*

## சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான கைது நடவடிக்கைகளை கைவிட வேண்டும் காயல் அப்பாஸ் வலியுறுத்தல்



*சட்ட மன்ற உறுப்பினர்கள் மீதான கைது நடவடிக்களை கைவிட வேண்டும் என த வெ க அரசை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வலியுறுத்தி யுள்ளார். இது குறித்து காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.*

*பொது மக்களால் தேர்ந்து எடுக்க பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறை படுத்தி வருவதனால் பொது மக்களிடடையே த வெக அரசின் மீது வெறுப்பை உண்டாக்கும் .மேலும் அந்த அந்த தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர்கள் அரசு மூலமாக வரும் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது போன்ற பல்வேறு பிரச்சனைகளை சரி செய்து வரும் சட்ட மன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறை படுத்துவதனால் அந்த தொகுதியில் எந்த ஒரு வேலையும் நடை பெறாமல் நின்று விடும் இதனால் பாதிக்க படுவது பொது மக்கள் மட்டுமே . என்பதை த வெ க அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.*

*த வெ க ஆட்சியில் தொடர்ந்து சட்ட மன்ற உறுப்பினர்கள் மீது தொடர்ந்து வழக்கு மற்றும் கைது செய்து சிறை படுத்தி வருவது தமிழக மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது. மேலும் மக்களால் தேர்ந்து எடுக்க பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலைமை ஏன்றால் பாமர மக்களின் நிலை என்னவா இருக்கும் என்கிற கேள்விகள் மக்களிடம் எழுந்துள்ளன ?*

*எனவே : அவதூறாக பேசும் சட்ட மன்ற உறுப்பினர்கள் மீது சட்ட ரிதியாக வழக்கு பதிவு செய்யலாம் ஆனால் கைது செய்து சிறை படுத்தினால் மட்டும் அவர்களை ஒடுக்க முடியுமா ? ஆகவே சட்ட மன்ற உறுப்பினர்கள் மீதான கைது செய்து சிறை படுத்தும் நோக்கத்தை த வெ க அரசு கை விட வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.*



ஈரோடு மாவட்டம், வேப்பம்பாளையம், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு வழங்க சமைக்கப்பட்ட மதிய உணவின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.

## விவசாயிகள் நலனிற்காக பயிர் கடன் ரூ.17,000 கோடி; இல்வச மின்சாரத்திற்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு





*தமிழக முதல்-அமைச்சர் விஜய், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின்,அ.தி.மு.க.பொதுச்செயலாளர்எடப்பாடி பழனிசாமி,துறைசார்ந்தஅமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்டோரும் அவைக்கு வருகைதந்தனர்.வேளாண் பட்ஜெட் தாக்கலை முன்னிட்டு, தமிழக முதல்-அமைச்சர் விஜய்யை நேரில் சந்தித்து தமிழக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் ர. வினோத் ஆசி பெற்றார். இதன்பின்னர் சபாநாயகர் பிரபாகர் அவைக்கு வருகை தந்ததும், உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதைதந்தனர்.அவையில்திருக்குறள் வாசிக்கப்பட்டது. . வேளாண்மையை பெருக்க பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள உள்ளோம் என கூறினார்.*

*ஓர் அரசு வல்லரசாகும் முன்பு விவசாயிகளின் அரசாக மாற வேண்டும் என்பதே முதல்வரின் கொள்கை என்று அவர் பேசியுள்ளார். தொடர்ந்து பட்ஜெட்டில் விவசாயிகள் பயன் பெறும் வகையிலான பல்வேறு திட்டங்களை அறிவித்து அவர் பேசினார்.*

*விவசாயிகள் நலன்*

*அதில், தமிழக விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்திற்காக ரூ.7,432 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.விவசாயிகளுக்குபயிர்கடன் ரூ.17,000கோடி உயிர்ம உர பயன்பாட்டை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ரூ.4,000 சிறப்பு ஊக்கத்தொகை.*

*உழவர் ஐ.டி. பெற்ற 3 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.6 கோடியில் மண்வள அட்டைகள் வழங்கப்படும்.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.